**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு**

**முன்னிலை திரு.G.அஜய் விக்ரிஷ் குமார், B.B.A.,LLB., (Hons).,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு**

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 05–ம் நாள் வெள்ளிக்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண்.740/2025**

CNR No.TNDP05-001549-2025

மணி (வயது 61/2025)
த/பெ. அத்தப்பா கவுண்டர், –– மனுதாரர் / வாகன உரிமையாளர்

/இடையே/

காவல் உதவி ஆய்வாளர்,
பாலக்கோடு காவல் நிலையம்
தருமபுரி மாவட்டம்.
குற்ற எண். 344/2022. –– எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர்

இம்மனு கடந்த25.05.2026–ம் தேதி இறுதியாக என் விசாரணைக்கு வந்து அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை –1 அவர்களும், மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.A.சிவா,B.A.,B.L.,D.C.S., மற்றும் திரு.S.செந்தில்,MBA.,LLB., அவர்கள் ஆஜராகியும், ஆட்சேபணை கேட்டு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/ வாகன உரிமையாளர் தரப்பில் வழக்கு சொத்தான KA 51 9207 என்ற பதிவு எண் கொண்ட Bharath Benz Tipper லாரியை இடைக்கால பாதுகாப்பில் அளிக்க வேண்டி மனுதாரரால் இம்மனு U/s.503 r/w 497 of BNSS –ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அரசு தரப்பில் காவல் துறைக்கும், அரசு வழக்கறிஞருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது.

3. மனுதாரர்/ வாகன உரிமையாளர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், மனுதாரரின் வாகனம் பாலக்கோடு காவல் நிலைய குற்ற எண்.344/2022 வழக்கில் மனுதாரரின் வாகனமான KA 51 9207 என்ற பதிவு எண் கொண்ட Bharath Benz Tipper லாரி காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், மனுச்சொத்து மனுதாரருக்கு உரிமைப்பட்டது என்றும், எனவே மேற்படி வழக்கு சொத்தினை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமாறு வாதிட்டார்.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.05 17:29:58 +0530

4. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய ஆட்சேபனையில், இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், மனு சொத்தினை மனுதாரர் / வாகன உரிமையாளர் வசம் ஒப்படைத்தால் வாகனத்தை விற்பனை அல்லது உருமாற்றம் செய்து விடுவார் என்றும், மேலும் இது போன்ற குற்றச்செயல்களில் ஈடுப்பட கூடும் எனவும், எனவே இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

**5. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா ? அல்லது இல்லையா ? என்பதே ஆகும்.**

i) இருதரப்பு கேட்கப்பட்டது. இவ்வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. பாலக்கோடு காவல் நிலைய குற்ற எண். 344/2022 –வழக்கில் மனுச்சொத்தான KA 51 9207 என்ற பதிவு எண் கொண்ட Bharath Benz Tipper லாரி நொரம்பு மண் திருட்டு குற்றச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக வாகனம் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனம் மனுதாரருக்கு உரிமையானது என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) இம்மனுதாரர் மனுச்சொத்தான KA 51 9207 என்ற பதிவு எண் கொண்ட Bharath Benz Tipper லாரியின் உரிமையாளர் என்றும், மேற்படி வாகனம் குற்றச்செயலுக்கு பயன்படுத்தப்படவில்லை என்றும், மேற்படி வாகனத்தை தன்னுடைய இடைக்கால பாதுகாப்பில் ஒப்படைக்குமாறு வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

iv) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்

***Annadurai***

***Vs.***

***The Inspector of Police, Kurisilapet Police Station Tirupathur District***

*Crl.O.P.No.646, 661, 668, 681 & 1146 of 2024, Dated: 29.01.2024*

*30 (e) Ex-consequenti, the Court for the purposes of Section 21(4-A) is the Court of the Magistrate since it is that Court which is empowered to take cognizance of the offences under Section 21(1). Hence, an application for release of vehicle will lie only before the jurisdictional Magistrate;*

*31. ....*

*32. ....The learned Judicial Magistrate shall now take the applications for release on file and dispose of the same in accordance with law.*

என்ற வழக்கில் Mines and Minerals வழக்குகளில் சம்பந்தப்பட்ட வாகனங்களை விடுவித்தல் குறித்த உத்தரவுகளை அதிகார வரம்புள்ள நடுவர் நீதிமன்றங்களே உத்தரவிடலாம் என கூறியுள்ளது.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.05 17:30:04 +0530

v) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையில் மனு சொத்து மனுதாரர் வசம் ஒப்படைக்கும்பட்சத்தில் அதனை அவர் அழிக்கக்கூடும் எனவும், விற்பனை செய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு உச்சநீதிமன்றம்,

***Sundarbhal Ambalal Desai Vs. State of Gujarat***

*Special Leave Petition (crl.) 2745/2002.*

> *In our view, whatever be the situation, it is of no use to keep such-seized vehicles at the police stations for a long period. It is for the magistrate to pass appropriate orders immediately by taking appropriate bond and guarantee as well as security for return of the said vehicles, if required at any point of time. This can be done pending hearing of applications for return of such vehicles.*

என்ற வழக்கில் காவல் நிலையத்தில் வாகனங்கள் வைத்திருப்பதால் எந்த பலனும் இல்லை எனவும், உரிய நிபந்தனைகளின் பேரில் வாகனங்களை திருப்பி அளிக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

vi) வாகனம் திறந்த வெளியில் வெயிலிலும், மழையிலும் இருந்தால் அதன் டையர் பாகங்களும், வாகனத்தின் இஞ்சினும் பழுது அடையும். மேலும், வாகனத்தின் மதிப்பும் குறையும். எனவே கீழ்கண்ட நிபந்தனையின் கீழ் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

1. மனு சொத்தான KA 51 9207 என்ற பதிவு எண் கொண்ட Bharath Benz Tipper லாரி பாலக்கோடு காவல் நிலையத்தார் இன்றிலிருந்து மூன்று வாரகாலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக தாக்கல் செய்ய வேண்டும்.
2. வழக்கு சொத்தான KA 51 9207 என்ற பதிவு எண் கொண்ட Bharath Benz Tipper லாரி இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக கோப்பில் எடுக்கப்பட்ட பின்னர் மனுச்சொத்திற்காக மனுதாரரும் மற்றும் இரண்டு நபர்களும் ரூபாய்.10,00,000/–த்திற்கான பிணையப்பத்திரம் இந்நீதிமன்றத்தில் எழுதி தரவேண்டும்.
3. மனுதாரர் வழக்கு சொத்தினை புகைப்படம் எடுத்து புகைப்படம் மற்றும் C.D or Memory Card or Pendrive - ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
4. மனுதாரர் மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி புத்தகத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.
5. மனுச்சொத்திற்கான பஞ்சநாமா தயார் செய்து அதில் மனுதாரர் கையொப்பம் செய்ய வேண்டும்.
6. இந்நீதிமன்றத்தின் வழக்கு விசாரணையின் போதும் இந்நீதிமன்றம் உத்தரவிட்டால் மனு சொத்தினை மனுதாரர் ஆஜர் செய்வதாகவும், வழக்கு

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.06.05 17:30:10 +0530

சொத்தினை எந்த மாற்றாக்கமும் செய்யமாட்டேன் எனவும், நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் விற்பனை எதுவும் செய்யமாட்டேன் எனவும், மனுதாரர் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு அவையறியப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.05 17:30:16 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
பாலக்கோடு.